## இராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறைகள்
## முன்னிலை: திரு.பெ.கா.வேணுசேகரன், B.Sc.,

நி.மு.அ1/729/2018 நாள்:06.03.2018

பொருள்: கிராம நிருவாகம் - தகுதிகான் பருவம் - நெமிலி வட்டம் - திரு. சு.வெங்கடேசன் மற்றும் 4, கிராம நிருவாக அலுவலர்கள் - கிராம நிருவாக அலுவலர் பணியமைப்பில் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக முடித்தது – தகுதிகாண் பருவம் முடித்ததாகக் கருதி ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. இராணிப்பேட்டை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறைகள் நக.அ1/1458/2013, நாள்:03.04.13.
2. இராணிப்பேட்டை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் செயல்முறைகள் நக.அ1/1458/13, நாள்: 06.01.15.
3. நெமிலி வட்டாட்சியரின் கடிதம் எண்.நக.அ2/495/17, நாள்.05.02.18.

-0-

ஆணை:

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை கோட்டம், நெமிலி வட்டத்தில் பணிபுரியும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட 05(ஐந்து) கிராம நிருவாக அலுவலர்களும், அவரவர் பெயருக்கு எதிரில் கலம் 3-ல் குறிப்பிட்டுள்ள தேதியில் தகுதிகாண் பருவத்தை ஆரம்பித்தும், மூன்றாண்டு காலத்தில் தொடர்ச்சியாக இரண்டாண்டு பணிக்காலத்தினை கலம் 5-ல் குறிப்பிட்டுள்ள தேதியில் முடித்துள்ளதால், கலம் 5-ல் கண்ட தேதியில் தகுதிகாண் பருவ காலத்தை மனநிறைவு அளிக்கும் விதத்தில் முடித்துள்ளதாக விளம்பியும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | கிராம நிர்வாக அலுவலர்களின் பெயர் (திருவாளர்கள்) | தகுதி காண் பருவம் ஆரம்பித்த நாள் | தகுதிகாண் பருவத்திற்கு சேராத காலம் | தகுதி காண் பருவம் முடித்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | சு.வெங்கடேசன் | 05.03.2013 முற்பகல் | — | 04.03.2015 பிற்பகல் |
| 2 | வே.சோமசுந்தரம் | 08.03.2013 முற்பகல் | — | 07.03.2015 பிற்பகல் |
| 3 | எல்.திலகம் | 06.03.2013 முற்பகல் | — | 05.03.2015 பிற்பகல் |
| 4 | சி.ஞானபிரகாஷ் | 04.04.2013 முற்பகல் | — | 03.04.2015 பிற்பகல் |
| 5 | பி.துளசிங்கராஜா | 15.04.2013 முற்பகல் | — | 14.04.2015 பிற்பகல் |

Scanned with CamScanner

இவர்களது தகுதிகாண் பருவம் முடித்தது குறித்தான ஆணையினை சம்பந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு நெமிலி வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இத்துடன் மேற்கண்ட கிராம நிருவாக அலுவலர்களின் 05(ஐந்து) பணிப்பதிவேடுகள் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலையும் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகிறது.

இணைப்பு: 05 பணிப்பதிவேடுகள்

6/3/18

வருவாய் கோட்டாட்சியர்,
இராணிப்பேட்டை.

பெறுநர்

6/3/18

சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் - நெமிலி வட்டாட்சியர் மூலமாக,

நகல்: வட்டாட்சியர், நெமிலி. சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு
சார்வு செய்து சார்வு நகல் அனுப்ப வேண்டியது.

நகல்: வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் -
அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with CamScanner